செ.வெ.எண் : 1033 நாள்: 26.11.2008

இலங்கைத் தமிழர்களுக்கு நிவாரண பொருட்களை வழங்குவதற்குத் தேவைப்படும் நிதியைத் திரட்ட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விடுத்த வேண்டுகோளின்படி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியின் கீழ் இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு (Srilankan Tamils Relief Fund) நன்கொடைகள் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் பெறப்பட்டு வருகின்றன. இந்த நன்கொடைகளுக்கு வருமானவரி விலக்கு அளிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய நிதி அமைச்சர் அவர்களுக்கு விடுத்த கோரிக்கையின் அடிப்படையில், மத்திய அரசின் நேர்முக வரி விதிப்பு ஆணையம் (Central Board of Direct Taxes) முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கு அளிக்கப்பட்டு வருவதுபோல இலங்கைத் தமிழர் நிவாரண நிதிக்கு வழங்கப்படும் நன்கொடைகளுக்கும் முழு வருமான வரி விலக்கு அளித்துள்ளது.

முதன்மைச் செயலர்,

நிதித் துறை

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9